**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.244/2022 – P.W.11**

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. சண்முகம் | Father's Name. நமச்சிவாயம் |
| Village : நாகப்பட்டினம் | Age: 57 |
| Date :02.07.2026 | தொழில் : சிறப்பு உதவி ஆய்வாளர் |

நம்பர்: 9498164789

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **2nd day of July 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamakeswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **2nd day of July 2026.**

Signature of Interpreter

**( 2 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 8ம் எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக அவர்களது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராக அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச.பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது நாகப்பட்டினம் போக்குவரத்து காவல் பிரிவில் சிறப்பு உதவி காவல் ஆய்வாளரா பணிபுரிந்துவருகிறேன். கடந்த 20.10.2021ம் தேதி வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபொழுது, நாகப்பட்டிம் அரசு தலைமை மருத்துவமனையில்

இருந்து கிடைக்கப்பெற்ற தகலைப்பெற்றேன். உடனடியாக நானே மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மணவாளன் த/பெ. சர்க்கரைதேவர் என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து மேற்படி புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றே காலை 10.00 மணியளவில் வெளிப்பாளையம், காவல் நிலைய குற்ற எண்.967/2021 இதச பிரிவுகள் 294(பி), 120(பி), 323, 324, 506(2), 307னின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசலை புகார் வாக்குமூலத்துடன் இணைத்து நாகப்பட்டினம், நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன். ஒரு நகலை புலன் விசாரணைக்காக திரு. தியாகராஜன் அவர்களிடம் ஒப்படைத்தேன். தற்போது காட்டப்படும் புகார் வாக்குமூலம் மற்றும் முதல்தகவல் அறிக்கையானது நான் பதிவு செய்ததுதான். புகார் வாக்குமூலம் அசா.1 மூலம் அதசாஆ.1 றாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை **அதசாஆ.2.** என்னை ஆய்வாளர் திரு. தியாகராஜன் விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**.

நான் எனது குவிமுச பிரிவு 161(3)றின் படியான வாக்குமூலத்தை படித்துப்பார்த்த பின்னிட்டுதான் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். அந்த வாக்குமுலத்தில் என்னை விசாரணை செய்து மேற்படி வாக்குமூலத்தை மேற்படி காவல் ஆய்வாளர் தியாகராஜன் பதிவு செய்ததாக பெயர் விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவரிடம்தான் நான் பதிவு

செய்த புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை புலன் விசாரணைக்காக ஒப்படைத்தேன்என சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். நான் சொல்லும் தியாகராஜன் எங்கள் காவல் நிலையத்திற்கு எப்போது காவல் ஆய்வாளராக சேர்ந்த என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இமானுவேல் ராயப்பன் என்பவர் யார் என்றால் வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் தியாகராஜன் பணி மாறுதல் ஆகி சென்ற பின்னிட்டு மேற்படி காவல் நிலையத்திற்கு வந்த காவல் ஆய்வாளர்தான் மேற்படி இமானுவேல் ராயப்பன். நான் மேற்படி காவல் ஆய்வாளர் இமானுவேல் ராயப்பனை இந்த வழக்கு சம்மந்தமாக பார்த்ததில்லையா என்றால் பார்த்ததில்லை. அவர் வெளிப்பாளையம் காவல் நிலையத்திற்கு காவல் ஆய்வாளராக வருவதற்கு முன்பே நான் பணி மாறுதலாக வேறு காவல் நிலையம் சென்றுவிட்டேன் என, சாட்சி அவராகவே சாட்சியம் அளிக்கிறார். நான் எப்போது வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் இருந்து பணி மாறுதல் ஆனேன் என்றால், நான் முதலில் அயல் பணியாக கீழையூர் காவல் நிலையம் சென்றேன். அதன் பின்னிட்டு 2022ல் தான் பணி மாறுதலாக சென்றேன். நான் அயல் பணியாக கீழையூர் காவல் நிலையத்தில் எந்த தேதியில் இருந்து எந்த தேதிவரை பணிபுரிந்தேன் என்றால் ஞாபகம் இல்லை.

இந்த வழக்கு சம்மந்தமாக நான் பதிவு செய்ததாக சொல்லப்படும் முதல் தகவல் அறிக்கையை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த முதல்தகவல் அறிக்கையை கணினியில் யார் தயார் செய்தார் என்றால் சிசிடிஎன்எஸ்சை பராமரிக்கும் காவலர் தயார் செய்தார். அவர் யார் என்று தற்போது எனக்கு நினைவில்லை. அசாஆ.1றான புகார் வாக்குமூலம் யாரால் கைப்பட எழுதப்பட்டது என்றால் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதில்லை. அதை யார் கைப்பட எழுதினார்கள் என்று

எனக்குத்தெரியாது. அசாஆ.1றான புகார் வாக்குமூலத்தில் அந்த புகாரினை பதிவு செய்ததாகவும், அதன் அடிப்படையில் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாகவும், எழுதப்பட்ட குறிப்புரைக்கு கீழ் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் என்னுடையதில்லை. அசாஆ.1றான புகார் வாக்குமூலம் என்னால் பதிவு செய்யபபட்டதா என்றால் இல்லை. முதல் விசாரணையில் நான் பதிவு செய்ததாக சொன்ன புகார் வாக்குமூலம் எங்கே என்றால் தெரியாது. அசாஆ.2டான முதல் தகவல் அறிக்கையில், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் அதனை நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்ததுபோல தியாகராஜன் என்பவரிடம் புலன் விசாரணைக்காக ஒப்படைத்ததாக சொல்லப்படவில்லை என்றும், இமானுவேல் ராயப்பன் என்ற காவல் ஆய்வாளரிடம் அதனை புலன் விசாரணைக்காக ஒப்படைத்ததாகத்தான் சொல்லப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான். எனது சாட்சியத்தின்படி நான் பதிவு செய்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கையானது அசாஆ.2 இல்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் அதில் என் கையெழுத்து உள்ளது. நான் பதிவு செய்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் அசாஆ.2டான முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லைஎன நான் சாட்சியம் அளிக்கும் நிலையில், அதில் எனது கையெழுத்து எப்படி வந்தது என்றால், சாட்சி புகார் வாக்குமூலத்தில் முதல்தகவல் அறிக்கையை பதிவு செய்தது சம்மந்தமான மேல்குறிப்பில் உள்ள கையெழுத்தும் தன்னுடையது என்று சாட்சியம் அளிக்கிறார்.

நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் இருந்து நான் எவ்வளவு நேரத்தில் தகவல் பெற்றேன் என்றால் 19.10.2021ம் தேதி இரவு சுமார் 10.30 அல்லது 11.00 மணியளவில் எனக்கு தகவல் வந்தது. நான் மறுநாள் காலைதான் மேற்படி மருத்துவமனைக்கு சென்று புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். நாகப்பட்டிம் அரசு மருத்துவமனைக்கு சென்று நான் புகார் வாக்குமூலம் பதிவு

செய்தபோது நேரம் என்ன இருக்கும் என்றால் காலை சுமார் 08.00 மணியிருக்கும். இந்த விபரங்களை புகார் வாக்குமூலத்திலோ, முதல் தகவல் அறிக்கையிலோ சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அசாஆ.2டான முதல் தகவல் அறிக்கையில் அசா.1 மணவாளன் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார் என்ற தகவலே கடந்த 20.10.2021ம் தேதிதான் வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் நான் நிலைய அலுவலில் இருந்தபொழுது வந்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

இந்த சம்பவமானது எந்த இடத்தில் எப்போது நடைப்பெற்றது என்றால் எங்கள் காவல் நிலையம் எதிரே உள்ள புதிய பேருந்து நிலையத்தில் கடந்த 19.10.2021ம் தேதி இரவு சுமார் 10.30 அல்லது 11.00 மணியளவில் நடைபெற்றுள்ளது. அந்த இடத்தின் அருகிலேயே ஒரு புறக்காவல் நிலையமும் உள்ளது என்றால் சரிதான். அசாஆ.2டான முதல்தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டதுபோல ஒரு குற்ற சம்பவம் நடைப்பெற்றால் உடனடியாக அருகிலேயே உள்ள புறக்காவல் மையத்தின் மூலமாகவோ அல்லது அங்கு போடும் சத்தத்தின் மூலமாகவோ அருகிலேயே உள்ள எங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் வந்துவிடும் என்று சொன்னால் சரிதான். அப்படி ஏதாவது எங்கள் காவல் நிலையத்திற்கு சம்பவம் நடந்த சமயத்திலேயே சம்பவ இடத்தில் இருந்து தகவல் வந்ததா என்றால் வந்தது. அதன் அடிப்படையில் உடனடியாக சம்பவ இடம் சென்று ஏதாவது விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்றால், நான்தான் உடனடியாக சம்பவ இடம் சென்று விசாரணை மேற்கொண்டேன். அப்போது அங்கு யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் கூட்டமாக இருந்தார்கள், சம்மந்தப்பட்ட நபர்கள் யாரும் இல்லை, GHக்கு அவர்களை அழைத்து சென்று விட்டதாக சொன்னார்கள். சம்பவம் நடந்த அன்றே சம்பவ இடம் சென்ற நான் விசாரித்து அதன் அடிப்படையில் ஏன்

உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் அப்போது இருந்த பதட்டத்தில் செய்யவில்லை. குறைந்தபட்சம் இந்த விபரங்கள் அசாஆ.2டான முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதை சொல்லாமல் அந்த விபரங்கள் ஏன் முதல் தகவல் அறிக்கையில் மறைக்கப்பட்டுள்ளது என்றால் காரணங்கள் கூற இயலாது.

எங்களது காவல் நிலையம் உள்ள அதே வளாகத்தில்தான் நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அவ்வாறான சூழ்நிலையில் நான் பதிவு செய்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலமோ அல்லது அசாஆ.1றான புகார் வாக்குமூலம் மற்றும் அசாஆ.2டான முதல் தகவல் அறிக்கையோ ஏன் உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்படாமல் கடந்த 21.10.2021ம் தேதி இரவு 9.55 மணிக்கு காலதாமதமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்பட்ட புகார் வாக்குமூலம் வழக்கிற்கு விரோதமாக இருந்ததால், எதிரிகளை உட்படுத்தி இந்த வழக்கு பதிவு செய்யவேண்டி அசாஆ.1றான புகார் வாக்குமூலம், அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட அசாஆ.2டான முதல் அறிக்கையும் யாரோ ஒருவரால் எங்கள் காவல் நிலையத்தில் வைத்து தவறாக உருவாக்கப்பட்டுள்ளது என்றும், அதில் உள்ள விபரம் தெரியாமல் அவைகளில் நான் வெறும் கையெழுத்து மட்டும் போட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

அசா.1 நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்ததுபோல நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் இருந்தார் என்பதை உறுதிப்படுத்தவும், அவரிடம் நான் புகார் வாக்குமூலம் பெற்றேன் என்பதை உறுதிப்படுத்தவும், நாகப்பட்டினம் அரசு மருத்துவமனை மருத்துவரிடம் நான் பதிவு செய்த புகாரில் ஏதேனும் கையொப்பம் பெற்றேனா என்றால் பெற்றேன். அந்த புகார்

வாக்குமூலத்தை நான் இந்த வழக்கு சம்மந்தமாக ஆஜர் செய்யவில்லை என்று சொன்னால் அது என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. நான் சாட்சியம் அளித்ததுபோல அசா.1றை நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் வைத்து நான் எந்தவித புகார் வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றும், அவரே தனது சாட்சியத்தில் சம்பவம் நடந்த அன்றே உடனடியாக நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் இருந்து தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் என்ற தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாகவும், அங்குவைத்துதான் அவரை போலிசார் விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அவர் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் இருந்தபொழுது அவர் மயக்க நிலையில்தான் இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.02 18:44:22 +0530